# தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை - 2019

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக முகவர் நிலையத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிக்காட்டவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதக அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவர் நிலையம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது முகவர் நிலையத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முகவர் நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகவர் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு முகவர் நிலையம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அவை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி முகவர் நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு முகவர் நிலையத்திக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவர் நிலையத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- முகவர் நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- முகவர் நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- முகவர் நிலையம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- முகவர் நிலையத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ முகவர் நிலையத்தின் தேவைப்பாடாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்காமை.

| இணங்கியிருக்காத நியமத்துக்கான தொடர்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| i) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இலுள்ள 21 ஆம் பிரிவிற்கு முரணாக மீளாய்வாண்டில் வாகனப் பராமரித்தல் மற்றும் திருத்தங்களிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 904,956 மூலதனமாக்கப்பட்டு அதற்காக ரூபா 133,523 பெறுமானத்தேய்வு ஏற்பாடு சீராக்கப்ப ட்டிருந்தது. இதன் காரணமாக மோட்டர் வாகனங்களின் பெறுமதி ரூபா 904,956 இனாலும் ஆண்டு பற்றாக்குறை ரூபா மேலும் 771,433 இனாலும் நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட் டுள்ளன. அவ்வாறே, நியமத்தின் 90 வது பத்தியின் படி, ரூபா 4,088 மில்லியன் மறுமதிப்பீட்டு ஒதுக்கம் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்க ளைச் சமர்ப்பிக்கையில் நீங்கள் இங்கே சுட்டிக்காட்டியுள்ள விடய ங்கள் கருத்திற் கொள்ளப்படும். | இலங்கை பொதுத்து றை கணக்கீட்டு நியம ங்களுடன் இணங்கும் வகையில் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| ii) முகவர் நிலையத்துக்கு எதிராக தொழிலாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 02 வழக்குகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட 06 வழக்குகள் தொடர்பில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இலுள்ள 100 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்படாததுடன் இது தொடர்பாக சாத்தியமான நிகழத்தக்க பொறுப்பை மதிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான இறுதி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்ப தற்கு முன்பு, அந்தந்த பிரிவுகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அனைத்து விடயங்களையும் நிதிப் பிரிவுக்கு அனுப்புமாறு அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டி ருந்த போதிலும், இது தொடர்பாக எங்களுக்கு அறிவிக் கப்படாததால் அவற்றை கணக்கு அறிக்கைகளில் வெளியிட முடிந்திருக்கவில்லை. | இலங்கை பொதுத்து றை கணக்கீட்டு நியம ங்களின் படி, நிகழத்த க்க பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| iii) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 10 இலுள்ள 39 ஆம் பந்தியின் பிரகாரம் சேவைகளின் வருமானத்தை அடையாளம் காண்பது தொடர்பாக பின்பற்ற வேண்டிய கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும், முகவர் நிலைய த்தினால் வெளிப்புறக் கட்சிகளுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கி யமைக்காக மீளாய்வாண்டில் கிடைத் திருந்த ரூபா 102,108,067 மில்லியன் வருமானத்தினை ஆலோசனை சேவைக ளின் வருமானமாக காண்பிக்காது | பல ஆண்டுகளாக கணக்குக ளைத் தயாரிப்பதற்கு அடிப்படை யாகக் கொள்ளப்பட்டிருந்த இந்த முறையே 2019 இன் நிதிக் கூற்றுக்களிலும் காணப்படுகின் றது. 2020 இன் நிதிக்கூற்றுக் களைத் தயாரிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள படி நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்து றை கணக்கீட்டு நியம த்தின் படி ஆலோச னைச் சேவை வருமான ங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடன்கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், சேவை பெறுநர்களிடமிருந்து கிடைத்திருந்த வருமானத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 86,974,317 செலவினத்தை சேவை வழங்கல் செலவாகக் காண்பிப்பதற்குப் பதிலாக கடன்கொடுத்தோருக்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, முகவர் நிலையத்தின் சேவை வருவானம் மற்றும் சேவை வழங்கல் செலவினம் என்பன நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) முகவர் நிலையத்திற்கு கடல் அலைகளை அவதானித்தல் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2016 – 2019 வரையான காலத்தில் கிடைத்திருந்த ரூபா 15இ249இ004வெளிநாட்டு மானியத்தை வெளிநாட்டு மானியமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கடன்கொடுத்தோர் எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதிலிருந்து ரூபா 2இ777இ917 இனை செலவிட்டு கட்டியெழுப்பியிருந்த மூலதனச் சொத்துக்களை காலத்தேய்மானம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இந்த மானியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்த ஒட்டுமொத்த மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினமான ரூபா 8இ361இ371தொகையினை குறித்த கடன்கொடுத்தோர் கணக்கிலிருந்து கழித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த விடயத்தை நாங்கள் ஒப்புக்கொள்வதுடன் எதிர்கால நிதிக்கூற்றுக்களில் இந்த பிழையை சீராக்குவதற்கு செயல் படுவோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி அரசாங்க மானியங்கள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **i)** மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த காணி கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் கப்பல்கள், படகுகள் போன்ற சொத்துக்களின் மீதிகளிற்கும் அதற்கு நேரொத்ததாக நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளிற்கும் இடையே ரூபா 3இ562இ506 கூட்டுத் தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | காணி கட்டிடங்கள், அலுவலக உபகரணங்கள், கணனிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மீன் தொட்டிகள், படகுகள், கப்பல்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் தவறுதலாக மூலதனமாக்கப்பட்டுள்ளன. | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குதலும் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ii) 2014 ஆம் ஆண்டில் முகவர் நிலையத்திற்கு மானியமாக கிடைத்திருந்த ரூபா 9இ390இ000 பெறுமதியுடைய மோட்டார் வாகனத்தின் பெறுமதி அரசாங்க மானியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, முகவர் நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பனாபிடிய மற்றும் கப்பரதொட இல் அமைந்துள்ள முறையே 3.416ஹெக்டயார் மற்றும் 1.025ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள 02 காணிகளின் பெறுமதி விலைமதிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 268இ750இ000பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரெகவ, கல்பிட்டி மற்றும் கடோகெலே இலுள்ள காணிகளின் உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகவர் நிலையத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கப்பரதொட மற்றும் பனாபிடிய காணிகளை விலைமதிப்புச் செய்து கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென்பதுடன், தற் போது கணக்கீடு செய்யப்பட்டு ள்ள ரெகவ, கல்பிட்டி மற்றும் கடோகெலே இலுள்ள காணி களின் உரித்தினை கையேற்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிறுவனத்திற்குச் சொந்த மான சொத்துக்களை உரியமுறையில் கையே ற்று கணக்கீடு செய்தல் வேண்டும். |
| iii) முன்னைய ஆண்டுகளின் தவறுகளை திருத்துகையில் திரண்ட நட்டத்திற்கு சீராக்கப்பட்டிருந்த ரூபா 44இ708இ465 கூட்டுத்தொகையான காசுப் பாய்ச்சலைக் கணிப்பிடுகையில் செயற்பாட்டு நடவடிக் கைகளிருந்து உருவான காசுப் பாய்ச்சலுக்குச் சீராக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படாத விதத்தில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்று திருத்தமாகத் தயாரிக்க ப்படுதல் வேண்டும். |
| iv) இனவிருத்தி நிலையமொன்றை நிர்மாணிப் பதற்காக உள்நாட்டு மானியத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ள ரூபா 27இ640இ331 சொத்துக்குரிய அரசாங்க மானிய காலத்தேய்மானத்தை அக்கணக்கிலிருந்து கழிக்காது திறைசேரி மானியத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு அறிக்கை களில் இதனைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க மானியங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி கணக்கீடு செய்யப் படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக ஆவணச் சான்றுகள் இல்லாமை.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அட்டுறுச் செலவினம் | 4இ281இ761 | உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்ப டாததுடன் 3 முதல் 4 ஆண்டுகள் வரையான காலத்தில் தீர்க்கப்பட்டிருக் கவில்லை. | இந்த ரூபா 4இ281இ761 இற்குரிய ஆவணங்க ளை கண்டுபிடிக்க முடிய வில்லை. இந்த விடயம் தொடர்பில் தீர்வு காணப தற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகின்றது. | அட்டுறு செலவினத் தை உறுதிப்படுத்தி அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

## 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான சாத்தியவள ஆய்வு அறிக்கையினை தயாரிப்பதற்காக வெளிவாரி நிறுவன மொன்றுக்கு ரூபா 1இ612இ898மிகை யாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதனை அறவிடுவதற்கு 06 ஆண்டு களிற்கும் மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், மேலதிகமாகச் செலுத்தியமைக்கு பொறுப்பான உத்தி யோகத்தரை இனங்கண்டு அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகள் அமைச்சுடன் கலந்து ரையாடப்பட்டு வருகின்றது. | மிகைக் கொடுப்பனவை பொறுப்புவாய்ந்த உத்தி யோகத்தரிடமிருந்து அறவி டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம்104 | 2009ஆம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 411இ000 பெறுமதியான கணனி மென் பொருள் மற்றும் ரூபா 52,000 கிரயமான கணனி 2012 ஆம் ஆண்டில் காணாமல் போயி ருந்த போதிலும், அது தொட ர்பில் இந்த நிதிப்பிரமாண த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் இது தொடர்பில் ஆரம்ப விசாரணை மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகா ரம் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நட வடிக்கை எடுக்க ப்படுதல் வேண் டும். |
| நிதிப்பிரமாணம்387 | எந்தவொரு அரசாங்க நிறுவ னமும் தனது உத்தியோக பூர்வ வங்கிக் கணக்கிலி ருந்து மேலதிகப்பற்றினை பெற்றுக் கொள்வது தடை செய்யப்பட்டுள்ள போதிலும், முகவர் நிலையத்தின் வங்கி க் கணக்கு இல. -001-1-214 3629680-3இன் ஊடாக 2019 திசெம்பர் மாதத்தில் ரூபா 6இ151இ631வரை தற்காலிக வங்கி மேலதிகப் பற்று வசதி | திசெம்பர் மாத ஊழியர் சம்பளத்திற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து உரி ய திகதியில் கட்டுநிதி கிடைக்காது பிந்திக் கிடைத்திருந்தமை காரண மாகவே இந்நிலை ஏற்பட் டிருந்தது. வங்கியினால் அறவிடப்பட்டிருந்த கட்ட ணத்தை மீண்டும் கணக் கிற்கு செலவு வைப்பதற்கு பொதுத் திறைசேரி இணங்கியுள்ளது. | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நட வடிக்கை எடுக் கப்படுதல் வேண் டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான கட்டணமாக ரூபா 5,000 தொகையும் ரூபா 12இ163வட்டிச் செலவும் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| நிதிப்பிரமாணம்(2)757 | மீளாய்வாண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணம் (2)757 இன் பிரகாரம் 2020 மார்ச் 31 இல் முடிவுறுத்தப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அதனை சமர்ப்பித்தல் கட்டாயமான போதிலும், நிலவிய கோவிட் நோய்த்தொற்று காரணமாக இந்த அறிக்கையினை 2020 ஆகஸ்ட் மாதத்திலேயே அனுப்பி வைக்க முடிந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| 2011ஏப்ரல் 21 ஆந் திகதிய MOFP/ERD/2011/1 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | செயற்திட்டங்களிற்காக வெளிநாட்டு மானியங்களை பெற்றுக் கொள்கையில் அதற்காக வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் அனுமதியினையும் இணக்கப்பாட்டினையும் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 2 சந்தர்ப்பங்களில் அந்த அனுமதியினையும் இணக்கப்பாட்டினையும் பெற்றுக் கொள்ளாது ரூபா 22இ487இ492வெளிநாட்டு மானியம் நிறுவனத்திற்கு நேரடியாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இது தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 2003யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12/ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1ஆம் பந்தி | வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், இவ்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக பணிப்பாளர் சபையினை நியமிப்பதன் தாமதம் காரணமாக இந்நிலை ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 1981இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் சட்டம் மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க திருத்திய சட்டத்தின் 18 ஆம் பிரிவு | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரேரணைகளை பொறுப்பேற்று மதிப்பிடுதல், முகவர் நிலையத்தின் வருடாந்த வேலைத் திட்டங்கள் மற்றும் பாதீடு தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைத்தல், குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளை கையேற்று மதிப்பிடுதல் மற்றும் அங்கீக | இந்தக் குழுவிற்காக புதிய உறுப்பினர்களை நியமிக்குமாறு கடந்த பல வருடங்களாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. 2019 மார்ச் 03 ஆந் திகதிய மற்றும் 2019 செப்தெம்பர் மாதக் கடிதங்களின் மூலம் இது | சட்டத்தின் ஏற்பாட்டின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் அவற்றின் செயல் முன்னேற்றத்தை கண்காணித்தல், அச்செயற்திட்டங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைத்தல், நிலமைக்கேற்ப பணிப்பாளர் சபையினால் அல்லது மன்றத்தினால் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற விஞ்ஞான ரீதியான அல்லது தொழில்நுட்ப ரீதியான விடயங்கள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்குதல் போன்றவற்றிற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் குழுவொன்றை நியமிக்க வேண்டிய போதிலும், முகவர் நிலையத்தினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் குழுவொன்று 2014 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், ஆய்வுகளின் செயலாற்றல் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், அக்குழு செயற்படாத நிலையில் காணப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதியான 2020 யூலை வரையிலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்காக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 1981இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் சட்டத்தின் 34 ஆம் பிரிவு. | முகவர் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கற்கைகள், ஆய்வுகள், பரீட்சார்த்தங்கள் மற்றும் ஏனைய புலனாய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் தொடர்பில் பெற்றுக்கொள்கின்ற தரவுகள், அறிக்கைகள் மற்றும் விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பணிப்பாளர் நாயகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பிலான பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பு நூலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அங்குள்ள தரவுத் தளத்தில் )Data Base) இதனுடன் தொடர்புடைய ஆய்வு அறிக்கைகள், நாளேடுகள் அனைத்தும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. | சட்டத்தின் ஏற்பாட்டின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

-----------------

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 16,444,930 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 32,954,047 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 16,509,117 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பராமரித்தல் செலவினம் ரூபா 27 மில்லியனாலும் ஆராய்ச்சி அபிவிருத்திச் செலவினம் ரூபா 14 மில்லியனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 62 மில்லியனாலும் குறைவடைந்திருந்தமை இதற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) முகவர் நிலையத்தினால் 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டிருந்தவாறு அதிகுளிரூட்டப்படாத பல நாள் இழுவைப் படகுகளில் மீன்கள் பிடிக்கப்பட்ட பின்னர் மீன்களின் இழப்பு சுமார் 40 சதவீதமாக இருப்பதுடன், மீன்கள் பிடிக்கப்பட்ட பின்னர் அவற்றின் சேதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, தொடர்ந்தும் அந்த இழப்பினை மதிப்பிடுவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது மொத்தம் ரூபா 7,490,550 செலவில் ஆராய்ச்சி நடத்தியிருந்தமை மூலம் ஆராய்ச்சி முடிவுகளை பொதுமக்களின் நலனுக்காக பயன்படுத்த முகாமைத்துவச் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 2018 மற்றும் 2019 இல் மீன்கள் பிடித்தலுக்குப் பிந்திய தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர்புடைய ஏனைய சில (பணிகள்) ஆய்வுகளிற்காக இச்செயற்திட்டத்தின் கீழ் மேலதிக நிதி செலவிடப்பட்டுள்ளது. அந்த ஏனைய ஆய்வுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.<br><br>2018 இன் செயற்திட்ட இல.4.1.1<br><br>• தெரிவு செய்யப்பட்ட பொருளாதார மையங்கள் (03) இலிருந்து மாதிரிகளைச் சேகரித்து அவை மல சலக் கழிவுகள் மற்றும் நோய்பரப்பும் பெக்டிரியாவினால் மாசடைந்துள்ளதா என்பதனை பரீட்சித்தல்.<br><br>• இலங்கையின் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள மீன்பிடித் தொழிலிற்காக ஐஸ் கட்டிகளை வழங்குகின்ற ஐஸ் உற்பத்தி ஆலைகளிலுள்ள ஐஸ் இனை பரிசோதித்தல்.<br><br>• கதிர்வீச்சுப் பாதுகாப்புப் பரிசோதனைக்காக மீன் மாதிரிகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தல்.<br><br>• தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல்.<br><br>2019 இன் செயற்திட்ட இல.4.1<br><br>• ஐஸ் உற்பத்தி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஐஸ் இன் தரத்தினை பரிசோதித்தல்.<br><br>• விசேட பொருளாதார மையங்க ளிலுள்ள மீன் விற்பனை நிலையங்களின் சுகாதார நிலை | ஆராய்ச்சிச் செயற் திட்டத்தின் குறிக் கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், ஆராய்ச்சி முடிவுகளை பொது மக்களின் நலனுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் தரத்தினை மதிப்பிடுதல்.<br><br>• இலங்கையின் இறக்குமதி மீன்பிடி உற்பத்திகளிலுள்ள நச்சுத்தன்மை கொண்ட கதிர்வீச்சுக் கழிவுகளின் (ரேடியோ நியுக்லைட்) பரிசோதனை. | |
| ii) 2017 ஆம் ஆண்டில் பல நாள் இழுவைப் படகுகளில் பிடிக்க ப்படுகின்ற மீன்களின் தரம் கெட்டுப்போவதைக் குறைக்கும் நோக்குடன் ரூபா 950இ130 செலவிடப்பட்டு அதிகுளிரூட்டி முறைமையொன்றுடன் கூடிய பல நாள் இழுவைப் படகொன்றை வடிவமைப்பத ற்கான ஆலோசனை அறிக்கை யொன்று மொரட்டுவ பல்கலை க்கழகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த அறிக்கையினை பயனு ள்ள விதத்தில் பயன்படுத்தி பல நாள் படகினை வடிவமை ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | 2017ஆம் ஆண்டில் இந்த ஆலோசனை அறிக்கையினை நாரா நிறுவனத்திற்குப் பெற்றுக்கொள்வதற்கான முக்கிய கார ணம் யாதெனில், நாரா நிறுவனத்தில் மீன்பிடி படகுகளை நிர்மாணிக்கும் தொழில்நுட்ப அறிவுபடைத்த விஞ்ஞானிகள் இல்லாமை யாகும். அதன்படி, இந்த ஆலோசனை அறிக்கையினை நாரா நிறுவனத்திற்குப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பல நாள் இழுவைப் படகுகளில் பிடிக்கப்படுகின்ற மீன்களின் சேதத்தைக் குறைப்பதற்கு தமது மீன்பிடிப் படகுகளில் காணப்பட வேண்டிய மீன் குளிரூட்டல் அறையினை உரிய தொழில் நுட்பத்தில் அமைப்பது தொடர்பிலான அறிவையும் விழிப்புணர் வையும் அதற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக படகுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் படகுகளின் உரிமையாளர்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டில் மீன்பிடி அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்ட உரிய தொழில்நுட்பத் துடன் கூடிய புதிய பாரிய மீன்பிடி படகுகளை (55 அடிகளிற்குக் கூடிய, குளிரூட்டல் அறையுடன் கூடிய மீன்பிடி படகுகள்) உற்பத்தி செய்வதற்கு நிதி உதவி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுக்களில் பயன்படுத்து வதற்காக இந்த ஆலோசனை அறிக்கை கையளிக்கப்பட்டது. | முகவர் நிறுவனம் தாபிக்கப்பட்டதன் பிரதான குறிக்கோள் களில் ஒன்றான நீரியல் வளங்களை பயன்பாட்டிற்கு எடுத் தல், கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத் துவம் செய்தலை அடைவதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 நிதிகளை குறைவாகப் பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகவர் நிலையத்திற்கு முறையாக கையேற்கப்படாத காணியில், முகவர் நிலையத்தின் குறிக்கோள்களிலிருந்து விலகி ரூபா 15இ245இ000செலவிடப்பட்டு 2014 ஆம் ஆண்டில் மீன் விற்பனை நிலையமொன்று பேருவல இல் அமைக்கப்பட்டதுடன் இது வரையிலும் அந்த மீன் விற்பனை நிலையம் விளைவற்றுக் காணப்படுகின்றது. | பின்னிணைப்பொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | முறையாக கையேற்கப்ப டாத காணியில், அரசாங்க நிதியினை செலவிட்டு நிர் மாண வேலைகள் செய்யா மலிருப்பதற்கு தேவையான சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02 படகுகளை உற்பத்தி செய்வதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 4இ493இ052 வீதம் உயர் வலு கொண்ட இரண்டு என்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட்டு 02 படகுகளையும் உற்பத்தி செய்கின்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அதற்காக ரூபா 2இ902இ938 மேலதிகமாக செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த இரண்டு என்ஜின்களும் உற்பத்தி செய்து முடிக்கப்படாத 02 படகுகளும் களஞ்சியத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தன. | இதனை வேறொரு அரசாங்க நிறுவனத்தின் தேவைக்காக பயன் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த போது இலஞ்ச மற்றும் ஊழல்கள் ஆணைக்குவினால் விசாரணை செய்யப்பட்டு அது தொடர்பில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றமையால் இது சம்பந் தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இலஞ்ச மற்றும் ஊழல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனையைக் கோரி கடித மொன்று அனுப்பிவைக்கப்பட்டு ள்ளது. | விளைவற்ற சொத்து க்களை பயன்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ப துடன் இது தொடர்பில் முகாமைத்துவம் கவ னம் செலுத்துதல் வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **i)** முகாமைத்துவ சேவைகள் திணைக் களத்தினால் பணிப்பாளர் நிதி மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் போன்ற பதவிகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர் ப்பு நடைமுறையின் படி அடிப்படை தகைமைகள் பூரணப்படுத்தப்படாதுள்ள இரு வர் பணிப்பாளர் நிதி மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் போன்ற பதவிகளிற்காக ஆட்சேர்க்கப்பட்டு 2017 மே முதல் 2019 திசெம்பர் 31 வரை மற்றும் 2014 முதல் 2019 திசெம்பர் 31 வரை முறையே ரூபா 5இ436இ226 மற்றும் ரூபா 2இ898இ393 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பின்னிணைப்பொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தகைமையுள்ள உத்தி யோகத்தர்களை ஆட் சேர்த்து முகவர் நிலை யத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு முகவர் நிலையத்தின் ஆய்வு நடவ டிக்கைகளில் நேரடியாக சம்பந்தப்பட் டிருந்த 22 பதவிகளில் 119 வெற்றிடங்கள் காணப்பட்டன. இப்பதவிகளில் தொடர்ச் சியாக வெற்றிடங்கள் காணப்படுதல் முகவர் நிலையத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதில் பாதகமான தாக்கத் தினை ஏற்படுத்தியுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | பின்னிணைப்பொன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினை சரி யாகத் திட்டமிட்டு வெற் றிடங்களை நிரப்புவதன் மூலம் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண் டும். |
| iii) மீனவச் சமூகத்தின் சமூகப் பொருளாதார | சமூகப் பொருளாதார மற்றும் விற்பனைப் பிரிவினால் 04 | மனித வளத்தை உரிய வாறு பயன்படுத்து வதற்கு |

நிலையினை மேம்படு த்துதல் மற்றும் என்ஜின்களை திருத்தியமைத்து அவற்றை பேணு வது தொடர்பில் பயிற்சி நிகழ்ச்சி களை நடைமுறைப்படுத்துதல் உள்ளி ட்ட 10 பாடநெறிகளையும் 05 செயலமர் வுகளையும் நடாத்துவதற் காக 2019 ஆம் ஆண்டில் சமூகப் பொருளாதார மற்றும் விற்பனைப் பிரிவினால் ரூபா 1இ000,00இற்கான மதிப்பீடொன்று ஆளுகைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிரு ந்ததுடன், அந்த ஆண்டில் 4 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 1இ205இ402 தொகை செலவிடப்பட்டிருந்தது.

நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது டன், 01 செயலமர்வும் நடாத்தப்பட்டது. இதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை ஏறத்தாழ ரூபா 08 இலட்சமாகும். அதற்கமைய, மதிப்பீட்டைக் காட்டிலும் அதிக மாக செலவிடப்பட்டிருக்கவி ல்லை.

நடவடிக்கை எடுக்க வேண்டுமென் பதுடன் இது தொடர் பில் முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும்.